அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 13/2021

எனது இலக்கம் : EST 5/4/24(XXXIII)
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.07.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## முன்னாள் படைச் சேவையாளர்களை நியமிக்கும் போது ஏற்புடையதாகும் சம்பளத்தைத் தீர்மானித்தல்

தாபனவிதிக் கோவையின் I ஆம் தொகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 8 பிரிவு தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

02. தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 17:1 (ஈ) ஆம் உப பிரிவின் கீழ் முன்னாள் படைச் சேவையாளருக்கு வழங்கப்படும் அனுசரணையின் கீழ், அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் தொழிலொன்றை வழங்கும் போது அந்த உத்தியோகத்தரின் சம்பளத்தை தீர்மானிக்கும் போது தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையதாக்குதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் தயாரிக்கப்பட வேண்டிய முறை தொடர்பான குறிப்பான ஏற்பாடுகள் அவ் அத்தியாயத்தில் அல்லது தாபனவிதிக் கோவையில் வேறு ஒரு அத்தியாயத்திலோ காணப்படவில்லை. அதனால், முன்னாள் படைச் சேவையாளர்களுக்கு அரசாங்க சேவையில் நியமனங்களை வழங்கும் போது அமைக்கப்பட வேண்டிய சம்பளப் படிமுறைகள் தொடர்பில் தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவை கீழ் வருமாறு திருத்துவதற்கும், பின்னர் 8:9 என பின்வருமாறு புதிய உப பிரிவு ஒன்றை சேர்ப்பதற்கும், 2020.10.12 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

> **"8. மீளவும் சேவையில் இணைத்துக் கொள்ளல், மாற்று வேலை வாய்ப்பு, விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மற்றும் முன்னாள் படை வீரராக ஆட்சேர்ப்பு செய்கையில் செலுத்தப்படும் சம்பளம்**
>
> **8:9 முன்னாள் படைச் சேவையாளரொவருக்கு வழங்கப்படும் சலுகைகளின் கீழ் அரச சேவைக்கு அல்லது கூட்டுத்தாபன சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவரின் சம்பளம், அந்த உத்தியோகத்தர் ஆயுதப் படைச் சேவையில் இருந்த காலத்தில் உழைத்திருந்து சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்."**

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு